செ.கு. எண் : 112 நாள் : 31/08/2011

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிக்கை – 31.8.2011

திருப்பூர் மாவட்டம், திருமூர்த்தி அணையிலிருந்து பாலாறு வடிநிலம் மற்றும் தளி வாய்க்கால் பாசன அமைப்பின்கீழ் உள்ள பகுதிகளுக்கு பாசன சாகுபடிக்காக தண்ணீர் திறந்து விடக் கோரி திருமூர்த்தி நீர்த்தேக்க திட்டக்குழு மற்றும் பாலாறு பாசன விவசாயிகள் திட்டக்குழு ஆகியவை உள்ளிட்ட கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் மாவட்ட வேளாண் பெருங்குடி மக்களிடமிருந்து எனக்குக் கோரிக்கைகள் வந்துள்ளன.

வேளாண் பெருங்குடிமக்களின் வேண்டுகோளினை ஏற்று, திருமூர்த்தி அணையிலிருந்து, பரம்பிக்குளம் பிரதான கால்வாய், உடுமலைப்பேட்டை கால்வாய் மற்றும் உயர்மட்டக் கால்வாய் ஆகியவற்றில் நான்காம் மண்டல பாலாறு வடிநில ஆயக்கட்டு பகுதிகளுக்கும், தளி வாய்க்கால் பாசனக் குளங்களுக்கும் **57 நாட்கள்**, தேவைக்கேற்ப இடைவெளி விட்டு **2.9.2011** முதல் தண்ணீர் திறந்துவிட நான் ஆணையிட்டுள்ளேன்.

இதனால், கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் **96,854 ஏக்கர்** நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஜெ ஜெயலலிதா
தமிழக முதலமைச்சர்

*வெளியீடு, இயக்குநர்,*
*செய்தி, மக்கள் தொடர்புத் துறை,*
*சென்னை-9*